# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## சங்கீதம் I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ..................... | தரம் :- 8 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

01. லலித கலைகளில் சிறந்தது
 1) நடனம் 2) நாடகம் 3) சங்கீதம் 4) சிற்பம்

02. இயற்கை ஸ்வரம் என்று அழைக்கப்படுவது
 1) விக்ருதிஸ்வரம் 2) பிரக்ருதிஸ்வரம்
 3) குறில் ஸ்வரம் 4) நெடில் ஸ்வரம்

03. ஸ்ருதியில் கூடி ஒலிக்கும் ஸ்வரம்
 1) கோமள ஸ்வரம் 2) மென்ஸ்வரம் 3) நிறைஸ்வரம் 4) குறைஸ்வரம்

04. ஸ - ப ஆகிய இரண்டு ஸ்வரங்களும் குறிப்பது
 1) பேதமற்ற ஸ்வரம் 2) பிரக்ருதி ஸ்வரம்
 3) சுத்தஸ்வரம் 4) மேற்கூறிய யாவும்

05. மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகணம் அவரோகணம்
 1) ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ 2) ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ
 3) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ 4) ஸரிகபநிஸ் ஸ்நிபகரிஸ

06. ஜாதி பேதமடையும் அங்கம்
 1) த்ருதம் 2) லகு 3) அனுத்ருதம் 4) புலுதம்

07. ரூபக தாளத்தின் முன்னால் ஒரு லகுவைப் (|) போட்டால் வரும் தாளம்
 1) ஏக தாளம் 2) ஆதி தாளம்
 3) மட்டிய தாளம் 4) ஜம்பை தாளம்

08. "கணநாதா குணம்நீதா" என்ற சஞ்சாரி கீதத்தின் இராகம்
 1) பிலஹரி 2) மாயாமாளவகௌளை 3) சங்கராபரணம் 4) மலஹரி

09. மன்னார் பிரதேசத்தில் பாடப்படும் நாட்டார் பாடல்
 1) தென்மோடிப் பாடல் 2) காமன் கூத்து 3) வசந்தன் பாடல் 4) குயிலாட்டம்

10. ஒப்பாரிப் பாடல் பாடப்படும் இராகம்
 1) நவரோஜ் 2) குறிஞ்சி 3) முகாரி 4) ஆனந்தபைரவி

11. இடைசுருங்கும் பறை/ துடி என அழைக்கப்படும் வாத்தியம் எது?
 1) உடுக்கு 2) டொல்கி 3) பறை 4) மிருதங்கம்

12. ஒரு அலங்காரம் எடுத்துக்கொள்ளும் ஆவர்த்தனங்கள்
 1) பத்து 2) ஐந்து 3) பன்னிரண்டு 4) இரண்டு

13. வெண்பா பாடப்படும் இராகம்
 1) மாயாமாளவகௌளை 2) ஆரபி 3) தோடி 4) சங்கராபரணம்



kalvi.lk

14. மாயாமாளவகௌளை இராகத்தின் மேள எண்

1) 29 2) 51 3) 28 4) 15

15. "ஸரிகபதஸ - ஸ்நிதபமகரிஸ" என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்

1) மலஹரி 2) மோகனம் 3) பிலஹரி 4) கல்யாணி

16. சந்தங்களைப் பிரதானமாகக் கொண்ட உருப்படி

1) திருவாசகம் 2) தேவாரம் 3) திருப்பல்லாண்டு 4) திருப்புகழ்

17. ஸப்த தாளங்களில் திரியாங்கம் இடம்பெறும் தாளம்

1) ஜம்பை தாளம் 2) ஏக தாளம் 3) ஆதி தாளம் 4) ரூபக தாளம்

18. சதுஸ்ரஜாதி ரூபக தாளத்தின் மொத்த அட்சரம்

1) 5 2) 6 3) 7 4) 12

19. பிலஹரி இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரம்

1) காகலிநிஷாதம் 2) சுத்தமத்திமம்

3) கைசிகிநிஷாதம் 4) சதுஸ்ருதிரிஷபம்

20. ஸ ரி கா | பா | பா || என்ற ஸ்வரப்பகுதிக்குரிய சாகித்தியம்

1) இன்ப ஊற்று 2) உறவின் ஊற்று

3) வேதத்தின் ஊற்று 4) அன்பே தான்நல்

**(20 x2=40 புள்ளிகள்)**

## பகுதி - II

**விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**01.** (1) அப்பியாச வரிசையை அமைத்தவர் யார்?

(2) அவற்றை இசைக்கும் இராகம் யாது?

(3) அப்பியாச வரிசைகள் 3 தருக.

(4) நீர் கற்ற அப்பியாச வரிசை ஒன்றினை இராகம், தாளம், இயற்றியவர், ஆரோகணம், அவரோகணம், தாள அங்க அடையாளங்கள், அங்கமுடிவு ஆவர்த்தன முடிவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதுக.

**(1 + 1 + 3 + 10 = 15 புள்ளிகள்)**

**02.** (1) ஸ்வரங்கள் எத்தனை?

(2) அவை எவை?

(3) பிரக்ருதி, விக்ருதி ஸ்வரங்களுக்கு உதாரணம் தருக.

(4) 12 ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக. **(1 + 2 + 2 + 10 = 15 புள்ளிகள்)**

**03.** (1) அரச செய்திகளை அறிவிப்பதற்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கிராமிய இசைக்கருவி எது?

(2) அதனை வேறு எவ்வாறு அழைப்பர்?

(3) அவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

(4) கிராமிய இசைக்கருவிகள் 3 தருக.

(5) ஐவகை நிலங்களுக்கும் உரிய வகையில் அவ் இசைக்கருவியினை வேறுபடுத்துக.

**(2 + 2 + 3 + 3 + 5 = 15 புள்ளிகள்)**



kalvi.lk

**04.** (1) அப்பியாசகான உருப்படிகளில் முதன்முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் உருப்படி எது?

(2) இதன் வேறு பெயர்கள் எவை?

(3) இவ்வுருப்படியை அலங்கரிக்கும் சொற்களை எவ்வாறு அழைப்பர்?

(4) இவை இயற்றப்படும் மொழிகள் எவை?

(5) அவ்வுருப்படி வகைகளை விளக்குக. **(2 + 2 + 2 + 3 + 6 = 15 புள்ளிகள்)**

**05.** (1) மருத்துவிச்சிப் பாடலுக்கு அடுத்ததாகப் பாடப்படும் குழந்தைப்பருவப் பாடல் எது?

(2) இப்பாடல் பாடப்படும் இராகங்கள் எவை?

(3) இப்பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

(4) இப்பாடலின் தொடக்கத்திலும் முடிவிலும் பயன்படுத்தப்படும் சொற்பதங்கள் எவை?

(5) இப்பாடல்கள் மூலம் நாம் எவற்றை அறிந்துகொள்ளலாம்?

(6) மனித வாழ்க்கையில் இசை எவ்வாறு தொடர்புபட்டுள்ளது?

**(2 + 2 + 2 + 2 + 3 + 4 = 15 புள்ளி**

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page